## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 110/2015 மற்றும் 54/2017(கூட்டு விசாரணை) | பி.வா.சா. | : | 1 |
| பெயர் | : | ராமன் | த/பெ. | : | லக்கன் அம்பலம் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | ஏரக்காபட்டி |
| தேதி | : | 04.03.2026 | வயது | : | 66/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2) நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தாக்கல் செய்துள்ளேன். பொது பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி நான் ஏற்கனவே மாவட்ட ஆட்சியருக்கும் வருவாய் துறை அதிகாரிகளுக்கும் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன்படி கடந்த 15.12.2014ஆம் தேதி இடத்தை அத்துமால் காட்டி அளவீடு செய்யப்பட்டு அதற்கான சான்றும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பட்டா நிலமான சர்வே எண்.18/10, 18/11 ஆகிய பட்டா நிலங்களுக்கு பாதை இல்லை என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் அகற்ற சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எனது பட்டா நிலங்களுக்கு நான்குமால் என்ன என்றால் வடக்கே எனது பங்காளி பெருமாள் பட்டா இடம் உள்ளது, மேற்கே பீட்டர் நிலம், கிழக்கே சிமிண்ட் ரோடு, தெற்கே செல்வராஜ் நிலம் உள்ளது. நிலமானது எப்போது யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனது பாட்டன் பெயரில் வாங்கப்பட்டது, பெயர் தெரியாது. சர்வே எண்.18/10, 18/11 வடபுறம் நத்தம் காரைக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.04 18:49:00 +0530

தேசிய நெடுஞ்சாலை வழியாக எனது பட்டா இடங்களுக்கு செல்ல முடியும் என்றால் முடியாது. பங்காளி இடம் உள்ளது. எனது பங்காளி நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. எந்த வகையில் பங்காளி என்றால் அப்பா வகையில் பங்காளி, சித்தப்பா மகன் ஆவார்.

4) எனக்கு சொந்தமான சர்வே எண்.18/10, 18/11 இடமானது 1947ம் வருடம் எனது தாத்தா(அப்பா வழி பாட்டனார்) அவர்களால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பா லக்கன் அம்பலம் உடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள். அவர்கள் நல்லியப்பன், பெருமாள் ஆவார்கள். மேற்படி நபர்களுக்குள் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள். அவ்வாறு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட போது நத்தம் – காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சொத்துக்களுக்கு செல்வதற்கு பாதை ஒதுக்கப்பட்டுதான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

5) வாய்மொழி பாகப்பிரிவினைப்படி யார், யாருக்கு எந்தெந்த பக்கம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று இவ்வழக்கில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தற்போது குடியிருந்து வரும் வீட்டிற்கு நேராக தேசிய நெடுஞ்சாலை வரை எந்த ஒரு வீடுகளோ, கட்டிட அமைப்புகளோ இல்லை என்றாலும், தென்னந்தோப்பாக தான் உள்ளது என்றாலும் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் இருந்து எனது வீட்டிற்கு செல்ல நேரடியாக வழி வசதி உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு செல்லும் எந்த ஒரு பாதையையும் இந்த பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.04 18:49:09 +0530

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04..03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.04 18:49:18 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.